தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

ஆடி 28, திருவள்ளுவர் ஆண்டு–2052

2021 ஆகஸ்ட் 13, வெள்ளிக்கிழமை

சென்னை–600 002, வாலாஜா சாலை, ஓமந்தூரார் அரசினர் தோட்டம், கலைவாணர் அரங்கம், மூன்றாவது தளத்தில் உள்ள பல்வகை கூட்டரங்கத்தில் மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. மு. அப்பாவு** *அவர்கள் தலைமையில் காலை 10–00 மணியளவில் பேரவை கூடியது.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

"இயற்றலும் ஈட்டலுங் காத்தலுங் காத்த
வகுத்தலும் வல்ல தரசு."

முறையாக நிதி ஆதாரங்களை வகுத்து, அரசாங்கக் கருவூலத்திற்கான வருவாயைப் பெருக்கி, அதைப் பாதுகாத்து திட்டமிட்டுச் செலவிடுவதுதான் திறமையான நல்லாட்சிக்கு இலக்கணமாகும்.

[**குறிப்பு:** *ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி* (*) *இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.*]

1. அறிவிப்பு

"காகிதமில்லா சட்டமன்றம்" என்னும் இலக்கினை எய்திடும் வகையில், 2021–2022 ஆம் ஆண்டிற்கான திருத்திய நிதிநிலை அறிக்கை மற்றும் வேளாண்மை நிதிநிலை அறிக்கை ஆகியவை மின் நிதிநிலை அறிக்கைகளாக முதன்முறையாக பேரவைக்கு அளித்தல் மற்றும் மாண்புமிகு உறுப்பினர்களுக்கு வழிகாட்டுதல்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பேரவைக்கு ஓர் அறிவிப்பு. "காகிதமில்லா சட்டமன்றம்" எனும் நிலையினை உருவாக்க எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கையின் தொடர்ச்சியாக,*

[பேரவைத் தலைவர்] [*2021 ஆகஸ்ட் 13*

2021–2022 ஆம் ஆண்டிற்கான திருத்திய நிதிநிலை அறிக்கை, வேளாண்மை நிதிநிலை அறிக்கை ஆகியன மின்–நிதிநிலை அறிக்கைகளாக முதன்முறையாக இப்பேரவைக்கு அளிக்கப்பட உள்ளன. (மேசையைத் தட்டும் ஒலி) இவ்விரு அறிக்கைகளும் மின்–நிதிநிலை அறிக்கைகளாக பேரவைக்கு அளிக்கப்படும் என்பதைப் பேரவையின் அனுமதியோடு தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

"காகிதமில்லா சட்டமன்றம்" அமைய, மின்–நிதிநிலை அறிக்கைகளாகப் பேரவையில் தாக்கல் செய்வதற்கு, பேரவை விதிகள் குழு, பேரவைக்கு பரிந்துரை அளித்துள்ளது. காகிதப் பயன்பாடு இல்லாத பேரவையின் செயல்பாடு இன்றுமுதல் அமையவுள்ளது, வரலாற்றுச் சிறப்புமிக்கது. (மேசையைத் தட்டும் ஒலி)

ஒவ்வோர் உறுப்பினருடைய மேசையிலும் ஒரு Personal Computer–ம், ஒரு கையடக்கக் கணினியும், பத்திரிகையாளர்களுக்கு எதிரில் பெரிய திரையும் அமைக்கப்பட்டுள்ளன.

இன்று, மாண்புமிகு நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்களும், நாளை மாண்புமிகு வேளாண்மை உழவர் நலத் துறை அமைச்சர் அவர்களும், மின்–நிதிநிலை அறிக்கைகளைப் பேரவைக்கு அளிக்கும்போது, மாண்புமிகு அமைச்சர்கள் மற்றும் உறுப்பினர்கள் பார்வையிடுவதற்கு வசதியாக, அவரவர் இருக்கைகளில் பொருத்தப்பட்டுள்ள கணினி திரையிலும், பத்திரிகையாளர்களுக்கு எதிரில் அமைக்கப்பட்டுள்ள பெரிய திரையிலும் உரிய பகுதிகள் காட்சிப்படுத்தப்படும்.

மேலும், மாண்புமிகு அமைச்சர்கள் மற்றும் உறுப்பினர்களின் இருக்கையில் கையடக்கத் தொடுதிரைக் கணினியும் கூடுதலாக வைக்கப்பட்டுள்ளது.

மாண்புமிகு அமைச்சர்கள் மற்றும் உறுப்பினர்களின் மேசைகளில் வைக்கப்பட்டுள்ள தொடுதிரை கையடக்கக் கணினி திரையில் இரண்டு Pdf files உள்ளன. புத்தக வடிவில் படிக்க, வலது பக்கத்தில் காணும் Pdf file–ஐயும், பெரிய எழுத்துக்களில் படிக்கவேண்டுமென்றால், இடது பக்கத்தில் காணும் Pdf file–ஐயும், விரலால் தொட்டு பின்பு, திரையில் தோன்றும் சிறு கட்டத்தில் கடவுச் சொல், (password) *3333*–ஐ, நான்கு முறை, *3* என்ற எண்ணைப் பதிவிடுமாறு கேட்டுக்கொள்கிறேன். அனைவரையும்

2021 ஆகஸ்ட் 13] [பேரவைத் தலைவர்]

அதில் தொடுமாறு அன்போடு கேட்டுக்கொள்கின்றேன். அதில் தெரியும் நிதிநிலை அறிக்கையின் பக்கங்களை, புத்தகத்தைத் திருப்புவது போன்றும் திருப்பலாம். தொடுதிரை கையடக்கக் கணினியில் தோன்றும் மின்–நிதிநிலை அறிக்கை பக்கங்களில் தேவைப்படும் பகுதிகளில் குறியீடுகள் அல்லது குறிப்புகள் மேற்கொள்ள கணினி தொடுதிரை எழுதுகோலும் (stylus pen) உறுப்பினர்களுக்கு அளிக்கப்பட்டுள்ளது. அடுத்த பக்கத்திற்குச் செல்ல, விரல்களை உபயோகித்து நகர்த்தவும். குறிப்புகளைச் சேமிக்க, வலது புறம் மேலே இருக்கும் save button–ஐ அழுத்தவும்.

மாண்புமிகு உறுப்பினர்கள் எவருக்கேனும் சிரமங்கள் இருப்பின், கையை உயர்த்தினால், அருகிலேயே உதவி செய்வதற்கு தொழில்நுட்பப் பணியாளர்களும் பேரவையின் அனுமதியோடு அனுமதிக்கப்பட்டுள்ளனர் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். தொடுதிரை கையடக்கக் கணினி, கணினி தொடுதிரை, எழுதுகோல் (stylus pen) ஆகியவை பேரவையில் உறுப்பினர்களின் பயன்பாட்டிற்காக மேசைமீது தொடர்ந்து வைத்திருக்கப்பட்டு, பின்னர் மாண்புமிகு உறுப்பினர்களுக்கு வழங்கப்படும்.

பேரவைக்கு அளிக்கப்படவுள்ள திருத்திய நிதிநிலை அறிக்கை, மின்–நிதிநிலை அறிக்கையாகத் தாக்கல் செய்யப்பட உள்ளதால், அச்சிடப்பட்ட பிரதிகள் தேவையெனக் கருதும் மாண்புமிகு உறுப்பினர்கள், முதல் தளத்தில் அமைந்துள்ள பேரவைச் செயலக அறையில் பெற்றுக்கொள்ளலாம் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

முற்பகல் 10–05

2. திருத்திய வரவு–செலவுத் திட்டம், 2021–2022, அளித்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *2021–2022 ஆம் ஆண்டிற்கான திருத்திய நிதிநிலை அறிக்கை அளித்தல். மாண்புமிகு நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடு)*

திரு. எடப்பாடி K. பழனிசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர், உட்காருங்கள், மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் நிதிநிலை அறிக்கையை வாசிக்கட்டும். (குறுக்கீடு) நீங்கள்*